IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, VANDAVASI

**CASE NO: OS.412/2024**

DEPOSITION OF WITNESS: **PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | ஜெகனாதன் | | : | |
| Father's/Husband's Name தந்தை/கணவர் பெயர் | : | ஏழுமலை | Calling/ தொழில் | : | |
| Village/கிராமம் | : | நல்லூர் | | : | |
| Taluk/தாலுக்கா | : | வந்தவாசி | Age/வயது | : | 38 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 9th day of April 2026.

**முதல் விசாரணை**

நான் நல்லூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதியை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்**

1. 24.12.1982 தேதியிட்ட ஏழுமலையும் கன்னியப்பனும் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் நகல் வா.சா.ஆ.1 ஆகும்.

2. 18.09.2013 தேதியிட்ட கன்னியப்பன் 6ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்படுத்தி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் வா.சா.ஆ.2 ஆகும்.

3. காலம் சென்ற ஏழுமலை இறந்ததற்கான இறப்பு சான்றிதழின் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.3 ஆகும்.

4. காலம் சென்ற ஏழுமலை வாரிசுகள் வாதிகள் என்பதற்கான் வாரிசு சான்று வா.சா.ஆ.4 ஆகும்.

5. காலம் சென்ற கன்னியப்பன், ஏழுமலை ஆகியோரின் வாரிசுகள் குறித்து ஒரு வம்சாவழி பட்டியல் வா.சா.ஆ.5 ஆகும்.

6. தாவா சொத்திற்கான பட்டா காலம் சென்ற கன்னியப்பன் பெயரில் வழங்கப்பட்டதற்கான பட்டா வா.சா.ஆ.6 ஆகும்.

7. 25.01.2021 தேதியிட்ட 6 முதல் 9 பிரதிவாதிகள் 10ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்த கிரைய பத்திரத்தின் நகல் வா.சா.ஆ.7 ஆகும்.

8. 07.02.2021 தேதியிட்ட வாதி 6 மற்றும் 10ம் பிரதிவாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் வா.சா.ஆ.8 ஆகும்.

9. வாதி கொடுத்த அறிவிப்பினை 6ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.9 ஆகும்.

10. வாதி கொடுத்த அறிவிப்பினை 10ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.10 ஆகும்.

11. 07.02.2021 தேதியிட்ட வாதி 11, 12 பிரதிவாதிகளுக்கு கோட்டாட்சியர், கிராம நிர்வாக அதிகாரி ஆகியோர்களுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் வா.சா.ஆ.11 ஆகும்.

12. வாதி கொடுத்த அறிவிப்பினை 11ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.12 ஆகும்.

13. வாதி கொடுத்த அறிவிப்பினை 12ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.13 ஆகும்.

14. வாதி கொடுத்த அறிவிப்பினை கோட்டாட்சியர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.14 ஆகும்.

15. வாதி கொடுத்த அறிவிப்பினை கிராம நிர்வாக அதிகாரி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.15 ஆகும்.

எனவே, பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.
**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்டுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.04.09 19:27:24 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி